<u>**O.S.No. 334/2007**</u>

<u>**DW1 :**</u> ராஜேஷ்கண்ணா தேதி 6.3.2026

<u>பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சிட்டி யூனியன் வங்கி ஈரோட்டில் களம் மீட்பு மேலாளராக 2025 மே மாதம் பணியில் சேர்ந்தேன். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டேன். வாதியின் மகள்கள் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார்களா என்று எனக்கு தெரியாது. 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கை பற்றி எனக்கு தெரியாது. 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தாவா சொத்தின் சுவாதீனம் எடுத்தார்கள் என்றால் அதை பற்றி தெரியாது. ஆணையர் மூலமாக சுவாதீனம் எடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. எங்கள் வங்கி சார்பாக கோரிக்கை மனு தாக்கல் செய்திருந்தோம் என்றால் அது எனக்கு தெரியாது. அ வ எண் 628/1998 குறித்து எனக்கு தெரியாது. அ வ எண் 628/1998 நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்தை பொறுத்து அளவீடு செய்து பிரிவினை செய்து 8 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அதன் பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து சுவாதீனம் கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. **DRT** ல் நடந்து வரும் சி.பி.எண்.234/98 வழக்கை குறித்து தெரியும். 8 மற்றும் 9 பிரதிவாதிகள் 10/12 பாகம் இருப்பதாக சொல்லியிருக்கிறார்களா என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கு கோப்புகளை எங்களது வங்கியில் யார் பராமரிக்கிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அ வ எண் 628/98 விவரங்கள் எனக்கு தெரியும் என்றும் எங்கள் வங்கியின் அதிகாரிகளின் செயல்களை வெளிப்படுத்தாமல் இருக்கும் பொறுட்டு அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.